செ.வெ.எண்: 35/ஜூன் நாள்: 16.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஊரணிகளில் செப்பனிடும் பணிகளை நிறைவேற்ற வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவு

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பல்வேறு ஊரணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.06.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, ஊரணி செப்பனிடும் பணிகளை மேற்கொள்ள நகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தென்மேற்கு பருவமழை காலம் துவங்கவுள்ளதை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஊரணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து ஊரணி செப்பனிடும் பணிகளை மேற்கொள்ள நகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இராமநாதபுரம் நகராட்சி பகுதிக்குள் சிதம்பரம் பிள்ளை ஊரணி, நொச்சிவயல் ஊரணி, முகவை ஊரணி, நீலகண்டி ஊரணி, திரௌபதியம்மன் கோவில் ஊரணி, காளி தேவியம்மன் ஊரணி , பாம்பூரணி ஆகிய ஊரணிகள் உள்ளன. இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஒவ்வொரு ஊரணிப் பகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்பு தென்மேற்கு பருவமழை காலங்களில் மழைநீர் வீணாகாமல் சேமித்திட ஏதுவாக இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து ஊரணிகளையும் ஆழப்படுத்தும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும், ஊரணிகளில் உள்ள படித்துறைகள் சேதமடைந்திருப்பின் உடனடியாக அதனை செப்பனிடவும், படித்துறைகள் இல்லாத ஊரணிகளில் படித்துறைகள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் நகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் நகராட்சி பகுதிகளில் சாலைப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் முன்னனுமதி பெற்ற பின்னரே விளம்பரப் பலகைகள் அமைத்திட வேண்டும் எனவும், முன்னனுமதி பெறாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளை உடனடியாக அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என நகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் திரு.ப.முகமது சிராஜ்,சுகாதார பொறியாளர் திரு.எம்.நடராஜன், உதவி பொறியாளர் திரு.எம்.சுப்பிரமணிய பிரபு உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**